விலை: சதம் 75

இனாம்

50 மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் அல்லது 10 மில்க்வைற் பார் சோப் மேலுறைகளை அனுப்பி ஒரு அழகிய சரஸ்வதிப் படமும், தேவி தோத்திரமும் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற்

யாழ்ப்பாணம்

ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆவணி 21 துல்ஹஃ 6 இதழ் 204

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 6-9-1981

செல்வச்சந்நிதியில் அமைந்திருக்கும் எமது

அண்ணாகோப்பி

விளம்பர நிலையத்தில் No 1 அண்ணா கோப்பியின் வெற்றுப் பைக்கட்டுகளைக் கொடுத்து எவர்சில்வர் டம்ளர், கரண்டி, சீனைபாய்க் போன்ற இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்

இச்சலுகை 10-9-81 மட்டுமே கொடுக்கப்படும்.

அண்ணா தொழிற்சாலை

இணுவில்

தொலைபேசி இல: 7412

# சுதந்திரக்கட்சிக்குள் மீண்டும் ஒற்றுமை ஏற்படும் அறிகுறி

## புஞ்சிநிலமேக்குப் பதில் அலவத்துவெல

(கொழும்பு)

தொடங்கஸ்லந்த எம். பி. திரு. எஸ். டபிஸ்யூ அலவத்துவெல பிரதேச அபிவிருத்தி பிரதி அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. அலவத்துவெல நேற்றுக்காலை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டார்.

பிரதேச அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்த இரத்தினபுரி எம். பி. திரு ஜி. வி. புஞ்சிநிலமே ஜனாதிபதியினால் பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்தே இவர் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். [இ]

## சிறிமா ஆலோசனை மீது உண்ணாவிரதம் நடக்கவில்லை

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரு பிரிவினரும், கடந்த சில தினங்களாக நடத்திவரும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இரு சாராருக்குமிடையில் ஒற்றுமை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சுமுக சூழ்நிலையை அடுத்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் இல்லத்தின் முன்பாகவும் திரு. அனுரா பண்டாரநாயக்காவின் இல்லத்தின் முன்பாகவும் நேற்று நடைபெறவிருந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

கட்சித் தலைவர்களிடையே சமரச முயற்சிக்கான பேச்சுவார்த்தை நடப்பதால், உண்ணாவிரதம் அவசியமில்லையெனக் கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்ததைத் தொடர்ந்து நேற்று நடைபெறவிருந்த உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாக ஸ்ரீலங்கா தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இதேசமயம், கண்டியில், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், திரு. அனுரா பண்டாரநாயக்காவும் சந்தித்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து திரு. அனுரா பண்டாரநாயக்காவும் திருமதி சிறிமாவோ பண்டாரநயக்காவின் மருமகனை திரு விஜயகுமாரதுங்காவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இப்பேச்சுவார்த்தைகள் கட்சிக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தும் சாத்தியகூறுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. [ம]

## யாழ். உதவி மேயராக அலோசியஸ்பதவிஏற்பார்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபையின் உதவி மேயராக திரு. எம். அலோசியஸ் பதவியேற்கவுள்ளார். இவர் யாழ் மாநகரசபையின் குருநகர்ப்பகுதி அங்கத்தவராக இருக்கிறார்.

உதவிமேயராகக் கடமையாற்றிய திரு. பி. எவ் சேவியர் சென்றமே மாதம் மேற்படி பதவியிலிருந்து விலகி, திரு. அலேசியஸுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் நியமனக்குழுவால் ஒப்பந்தமொன்று செய்யப்பட்டிருந்தது. ஆனால் இவ்வொப்பந்தம் நிறைவேற்றப்படாமலே 5 மாதங்கள் கடந்துவிட்டன.

இப்பொழுது கட்சித்தலைமைப்பீடத்தின் வேண்டுகோளின் பிரகாரம் நேற்று இவர் தமது உதவி மேயருக்கான பதவி விலகல் கடிதத்தை செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்துள்ளார்.

உதவிமேயராகப் பதவியேற்கும் திரு. அலோசியஸ் குறிப்பிட்ட காலத்துக்குப்பின் கட்சியின் வேண்டுகோளின்படி திரு என் றி செல்லத்துரைக்கு விட்டுக் கொடுக்கவிருப்பதாகத் தெரிகிறது. [மா]

## இன்று நடக்கும் ஆய்வரங்கு

[யாழ்ப்பாணம்]

நவராத்திரி விரதாரம்பத்தை நிர்ணயம் செய்வதற்கான இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தின் ஆய்வரங்கு இன்று மாலை நல்லூர் திரு ஞானசம்பந்தர் ஆதினத்தில் நடைபெறவுள்ளது.

## மின் அதிகரிப்பால் பாவனையாளர் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பீச் ரோட்டில் நேற்றுமுன்தினம் மின் விநியோகம் திடீரென அதிகரித்ததால் பாவனையாளர்கள் பலர் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. மின்விளக்குகள், குளிர்சாதனபெட்டிகள் போன்றவை மின்சாரம் அதிகரிப்பினால் எரிந்துபோய்விட்டதாக அன்னுள் மாநகர உறுப்பினர் திரு ராஜசூரியர் கூறினார். இது தொடர்பாக மாநகரசபை ஆணையாளரிடம் மனுவொன்று கொடுக்கப்பட விருப்பதாகவும் அவர் கூறினர்.

முல்லைத்தீவு மா. அ. சபை

## கூட்டணி 2வது உறுப்பினர் ராஜினாமாசெய்யவேண்டும்

### செயலாளர் நாயகம் அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திசபையின் 2வது உறுப்பினரான திரு. கே. தம்பாபிள்ளையை, கட்சியின் பணிப்புப்படி ராஜினாமாக் கடிதத்தை உடனடியாக அனுப்பிவைக்கும்படி தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தந்திமூலம் கேட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திசபைக்கு தமிழர் விடுதலை கூட்டணிக்குக் கிடைத்த வாக்குகளின் விகிதாசாரப்படி துணுக்காய்ப்பகுதி உறுப்பினரான திரு. சி. ஜே. ஜெயசீலனுக்கே இரண்டாவது இடம் வழங்க வேண்டும். இதன்படி திரு தப்பாபிள்ளை தமது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து, திரு ஜெயசீலனுக்கே இடம் கொடுக்க வேண்டும்.

திரும்பவும் இருவருடங்களுக்குப்பின்பு ஒப்பந்தப்படி திரு. தம்பாபிள்ளை அபிவிருத்தி சபை உறுப்பினராக நியமிக்கப்படுவார் எனத் தெரிய வருகிறது.

முல்லைத்தீவு அபிவிருத்தி சபைக்கு இரு ஐ. தே, கட்சி உறுப்பினரும், 2 த வி கூ. உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டது தெரிந்ததே [மா]

## டாக்டர் 'விக்கி'யின் பூதவுடல் மாத்தறை வந்தது

### இன்று இறுதிச்சடங்கு

[மாத்தறை]

டாக்டர் விக்கிரமசிங்காவின் பூதவுடலைத்தாங்கிய மோட்டார் ஊர்வலம் நேற்று நண்பகல் ஒருமணிக்கு மாத்தறையை வந்தடைந்தது

மாத்தறை மாவட்ட அமைச்சர் திரு. சி. பி. அபயவர்த்தன பாராளுமன்ற உறுப்பினர், நகரசபை உறுப்பினர்கள் பூதவுடலை ஏற்றுக்கொண்டனர்.

வீதிகளில் பெருந்திரளான மக்களும் ஆசிரியர்கள் மாணவர்களும் கூடிநின்று அஞ்சலி செலுத்தினர்கள் இன்று மாலை ஈமைச்சடங்குகள் மாத்தறையில் நடைபெறும்.

## இறுதி அஞ்சலியில் இன்று 'அமிர்' கலந்துகொள்வார்

[யாழ்ப்பாணம்]

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் டாக்டர் விக்கிரமசிங்காவின் மரணச் சடங்கில் பங்குபற்றுவதற்காக நேற்று மாத்தறைக்குப் புறப்பட்டார்

தமிழர்விடுதலைக் கூட்டணியின் சார்பில் செல்லும் செயலாளர்நாயகம் திரு. அமிர்தலிங்கம் டாக்டர் விக்கிரமசிங்காவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் அனுதாபக் கூட்டத்திலும் கலந்து உரைநிகழ்த்துவார். [யா-]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கல்வயல் பழைய பாடசாலை ஒழுங்கையில் நான்கு பரப்பு குடியிருக்கக்கூடிய காணி விற்பனைக்குண்டு. (பயன்தரு மரங்களுண்டு) விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் வை. கோவிந்தசாமி, பெரியரசடி, சங்கத்தானை, சாவகச்சேரி. 0799

திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் 2½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: "சிறீ வாணி", பலாலி வீதி, திருநெல்வேலி 0837

B. S. A. 2.5 H. P. C. 12, 1 இறி 5000 தொடர். நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு தொடர்பு: 22, நக்கர வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 0858

கல்வியங்காட்டிற்கும் இருபாலைக்கும் இடையில் ரோட்டில் இருந்து 1/2 மைல் தூரத்தில் 9 1/2, அல்லது 6 பரப்பு காணி வருமானத்துடன் விற்பனைக்குண்டு. மதிப்பு ரூபா 15,000/-. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0850, மே/பா, ஈழநாடு. யாழ்ப்பாணம். 0850

நல்ல நிலையிலுள்ள Allwyn Puspak ஸ்கூட்டர் உடன் விற்பனைக்குண்டு. 206, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பார்வையிடலாம். 0848

வவுனியா தமிழ் பகுதியில் பகுதி திருத்தப்பட்ட நிலையில் 50 ஏக்கர் காணி குளத்துடன் விற்பனைக்கு உண்டு. ஸாந்தா அக்கடமி, தபால் நிலைய வீதி, சாவகச்சேரி. 0855

யாழ். வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியில் பழைய வீடு மட்டும். விபரத்திற்கு 41, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 0828

யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசாமி ரோட்டில் (யாழ் பல்கலைக்கழகத்திற்கும் இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையில்) ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். இ. இராசநாயகம், பிரசித்தநொத்தரிஸ், 56, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். 0834

முல்லைத்தீவு - மாங்குளம் வீதி ஓரம் கல்விளான் பகுதியிலுள்ள வயல் எனும் நெற்காணி 4½ நாலரை ஏக்கர் உடன் விற்பனைக்குண்டு. விபரம் க. இளையதம்பி, 17 சைவப்பாடசாலை வீதி முல்லைத்தீவு அல்லது 14/1 அன்னசத்திர ஒழுங்கை யாழ்ப்பாணம் 0790

## வாடகைக்கு

பருத்தித்துறையில் கடை வாடகைக்கு கொடுக்கப்படும். 6, பிரதானவீதி, பருத்தித்துறை. 0851

## குத்தகைக்கு

வவுனியாப் பகுதியில் 3 ஏக்கர் தோட்டமும் 5 ஏக்கர் வயலும், 4 ஏக்கர் உழுந்து பயிரிடக்கூடிய காணியும் குத்தகைக்கு உண்டு. தொடர்பு: சதா கிறீம் கவுஸ், கோட்டடி, சாவகச்சேரி. 0856

## வைத்தியம்

மனநோய் எவ்வளவு நாட்பட்டதாயினும் உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் V. T. சந்திரன், 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0857

## பயிற்சி

றேடியோ - டெலிவிசன், ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் மூன்றுமாத டிப்புளோமா பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 10-9-81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, மொம்சக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0838

## பிக்குவைக் கவர்ந்த கும்பாபிஷேக விழா

(மாவிட்டபுரம்)

கீரிமலை கிருஷ்ணர்ஆலய கும்பாபிஷேகவிழா பௌத்த குரு ஒருவரை வெகுவாகக் கவர்ந்தது.

இக்கும்பாபிஷேக விழாவில் காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை பிரதமகுரு அவை தெல்கொட பதும ஸ்ரீ தேரோ கலந்து கும்பாபிஷேகக் கிரியைகளை வெகு அவதான மாகக் கவனித்தார்.

பாலஸ்தானில் கிருஷ்ணரை பிரதிஷ்டைசெய்து ஓமம் வளர்க்கும் காட்சி தம்மைப் பெரிதும் கவர்ந்ததாகவும் 9 குருமார்கள் சுற்றிவர இருந்து மந்திரங்களை ஓதிக் கிரியைகளை நடத்தியபோது தமது உடம்பு புல்லரித்ததாகவும் பௌத்தகுரு தெரிவித்தார்.

கிருஷ்ணரைப்பற்றி தாம் ஏற்கனவே அறிந்துள்ளதாகவும், அக்கடவுளில் தமக்கு அதிக பற்று உள்ளதாகவும், கிருஷ்ணருக்கு பழவகைகள் படைத்து பெரிய பூசைஒன்று செய்விக்கவிரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் ஆலயநடைமுறைகள் கிரியைகள் பற்றிய விளக்கங்களையும் குருமாரிடம் அவர் கேட்டறிந்தார்.


ஸ்ரீ பரமானந்தா மாணவர் இல்லம்

சுழிபுரம்; சரவெட்டி.

### தேவை

பெண் பிள்ளைகளை மேற்பார்வை செய்ய ஒரு பெண்ணும் (Matron)
ஆண் பிள்ளைகளுக்கு ஒரு வாரிடனும் (Warden)
சைவ உணவு சமைப்பதற்கு ஒரு பெண்ணும் தேவை
வயது 40 — 60

விண்ணப்பிக்க விரும்புவோர்
14-9-81 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு
நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

சுவாமி பரமானந்தர்.

0349


சாவகச்சேரி

# நீதிமன்ற வளவிற்குள் சண்டை, 9 எதிரிகளுக்கு அபராதம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி நீதிமன்ற வளவிற்குள் கைகலப்பில் ஈடுபட்ட 9 பேருக்கு தலா 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மிருசுவில் வெள்ளாம்பள்ளம் என்ற இடத்தில் நடைபெற்ற கொலைசம்பந்தமான வழக்காளிகளுக்கும் எதிராளிகளுக்குமிடையிலேயே இக் கைகலப்பு நடைபெற்றது.

கைகலப்பில் ஈடுபட்ட வே. துரைசிங்கம், இ. சிவராசா, இ. சிவசுப்பிரமணியம், இ. இராசலிங்கம், இ. சிவராசா, இ. தர்மலிங்கம், மு. நவரத்தினம், சி. சிவராசரத்தினம், இ. சிவஞானம் ஆகியோரை பொலிஸ்சார்ஜன் எஸ். இராசதுரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

நீதிமன்ற வளவிற்குள் சண்டைபிடித்து சமாதானத்திற்கும் அமைதிக்கும் பங்கம் விளைவித்ததாக இவர்கள்மீது குற்றம்சாட்டப்பட்டது.

சாவகச்சேரி பதில்நீதிபதி இ. பாலகிருஷ்ணன், எதிரிகளுக்கு தலா 25 ரூபா அபராதம் விதித்தார். (க)

## மண்டைதீவில் சகாயவேலை

(மண்டைதீவு)

வேலணை அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மண்டைதீவுப் பகுதியில் வரட்சி நிவாரண வேலைகள் இப்பகுதிக் கிராம சேவை அலுவலர் திரு. ந. சிறியபாலன் தலைமையில் நடைபெற்று வருகின்றன. அணைக்கட்டுகள், குளங்கள், வீதிகள் ஆகியவற்றைத் திருத்துவதில் பெரும் தொகையான இளைஞர்கள் பங்குபற்றி வருகின்றனர். [அ]

## மன்றுடல் மாதாந்த இதழ்

(அரியாலை)

இலங்கை இல்லந் தோறும் நற்செய்தி திருவனத்தினர் 'மன்றுடல்' என்ற மாதாந்த தமிழ் பத்திரிகையொன்றை வெளியிட்டுள்ளனர்.

இப் பத்திரிகையின் ஆசிரியராக சகோதரர் றேச்சல் எவ். இரத்தினராசாவும் துணை ஆசிரியர்களாக சகோதரர்கள் மதுரநாயகம் மனுவேற்பிள்ளையும், ரூஷான் செல்வரத்தினமும் பணிபுரிகிறார்கள். (இ)

## திருத்தம்

நுணாவில் வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை அதிர்ஷ்ட லாபச் சீட்டு முடிவுகள் நேற்றைய பத்திரிகையில் 2-ம் பரிசு இலக்கம் 80 என்றிருப்பதை 3880 எனத் திருத்தி வாசிக்கவும்.

வி. மார்க்கண்டு, செயலாளர்.

## வெற்றிடங்கள்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்

மேற்படி கூட்டுத்தாபனத்தில் பொருத்துனர், ஓட்டுனர், திருத்துனர் ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்களை இக் கூட்டுத்தாபனம் அபிவிருத்திச் சபையின் மூலம் பெறவிருக்கின்றது. ஆகையால் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்குத் தங்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது. விண்ணப்பங்கள் 15-09-1981-க்கு முன்னர் கிடைத்தல் வேண்டும்.

தலைவர்,
அபிவிருத்திச்சபை,
யாழ்ப்பாணம். 0852


யாழ்ப்பாண அக்கடமி
க. பொ. த.
உயர்தர பரீட்சை
ஏப்ரில் 1982

### மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் 9-9-81ல் ஆரம்பமாகின்றன. சேரவிரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். 1981 பரீட்சைப் பெறுபேறுகளின் பின் மேலதிக வகுப்புகள் ஆரம்பமாகமாட்டா.

அதிபர்

தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்

0758


## வவனியா மாணவி கடத்தல்

# பருத்தித்துறையில் கார் கைப்பற்றப்பட்டது

(புலோலி)

மாணவி ஒருத்தியைக் கடத்திச்சென்ற சம்பவம்தொடர்பாக வவனியாப் பொலிசாரினால் தேடப்பட்டுவந்த சொமசெற் கார் ஒன்றை பருத்தித்துறை பஸ்நிலையத்தில்வைத்து பருத்தித்துறைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

வவனியாவில் இடம்பெற்ற மாணவி ஒருத்தியைக் கடத்திச்சென்ற சம்பவத்தில் இவ இளைஞர்களையும் காரொன்றையும் பொலிசார் தேடி வந்தனர். இக்கார் பருத்தித்துறை பஸ்நிலையத்திற்கு அருகாமையில் பருத்தித்துறைப் பொலிஸ்சார்ஜன்ட் ஜனுப் எம். ரீ. எம். உவைஸ் தலைமையிலான பொலிஸ்கோஷ்டியால் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட காரையும் சாரதியையும் பொலிஸ் நிலையம் கொண்டுசென்ற பொலிசார் விசாரணையின்பின் சாரதியை விடுதலைசெய்தனர். கார் பருத்தித்துறைப் பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. இக் கார் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிசார் வவனியா பொலிசிற்கு அறிவித்துள்ளனர். இம் மாணவியைக் கடத்திச்சென்றது சம்பந்தமாக குடத்தனையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிசாரால் தேடப்பட்டுவருகிறார்.

## ஊழியத்தின் பொன் விழா

(அரியாலை)

கிறிஸ்தவ மிஷனரியாக 1931-ம் ஆண்டு இலங்கைக்கு வந்த சகோதரி எலிசபெத் பேக்கர் அம்மையார் இன்று பரந்தன் நவஜீவனத்தில் தனது கிறிஸ்தவ மிஷனரி ஊழியத்தின் 50-வது ஆண்டு பொன் விழாவைக் கொண்டாடுகிறார்.

நவஜீவன தேவாலயத்தில் காலை நடைபெறும் நன்றி தெரிவிக்கும் தோத்திர ஆராதனையுடன் விழா ஆரம்பமாகி மாலை நடைபெறும் வரவேற்புக் கூட்டத்துடன் விழா முடிவடையும்.

## உற்சவம்

[மண்டைதீவு]

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர்ஆலயவருடாந்த உற்சவம் கடந்த4-ம்திகதிஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறுகிறது. உற்சவகாலங்களில் இரவு விசேஷ நிகழ்ச்சியாக, வில்லிசை, சமயச் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன. (அ)

## தேவாலயம் புனரமைப்பு

(அரியாலை)

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சூறாவளியினால் முற்றுச் சேதமடைந்த கல்லாறு மெதடிஸ்த தேவாலயம் திரும்பவும் புனரமைக்கப்பட்டு மெதடிஸ்த மகாசங்கத் தலைவர் கனம் சோமா பெரேரா அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது. (இ)


உ
சிவமயம்

### திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துர்மதி வருடம் ஆவணி வியாழன் 25-ம் நாள் (10-9-1981) காலை 8-30 முதல் 10-00 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் ஸ்ரீகாந்தா அவர்களுக்கும் | எமது புத்திரி திருநிறை செல்வி சாந்தினி அவர்களுக்கும் |

நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமணத்திற்கு சுற்றஞ்சூழ வந்திருந்து சிறப்பித்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

வைத்தியகலாநிதிகள்

| | |
|---|---|
| திருமதி அன்னலிங்கம் | சிங்கநாயகமும் பாரியாரும் |
| 152, கோவில் வீதி, | 15, செட்டித்தெரு, |
| நல்லூர், | நல்லூர். |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

(0817)

The Ladies Academy

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

★ Scientific Dress Making
★ Cake Making & Decoration
★ General Cookery
★ Hair Styles & Beauty Treatment

மேலதிக விபரங்கட்கு ஞாயிற்றுக்கிழமைகளில் 10 — 3 மணிக்குயிடையில் தொடர்பு கொள்ளவும்.
4, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(0854)

# எண்பது வயதிலும் சளைக்காது உழைக்கும் பரந்தன் 'நவஜீவனம்' தலைவி பேக்கர் அம்மையாருக்கு பொன்விழா



தனது தாயகத்தின் சுக போகங்களைத்துறந்து, அந்நிய நாடொன்றிலே ஒதுக்கப்பட்ட மானுடருக்காக பணிபுரிவதில் தமது வாழ்வின் 50 ஆண்டுகளை அர்ப்பணம்செய்துள்ள பரந்தன் நவஜீவனத்தைச் சேர்ந்த சகோதரி எலிஸபெத் பேக்கர் அவர்களின் சேவை, அற்புதம் நிறைந்தது.

'நவஜீவனம்' இச்சேவகியின் 50 ஆண்டுகால சேவையினை உறுதிப்படுத்தும் வகையில் பொன் விழாக் கொண்டாடு கின்றது. இவ்விழாக்கொண் டாட்டங்களிலே இதன் நாய கியான சகோதரி எலிஸபெத் பேக்கர் தனது எண்பதாவது வயதிலும் எவ்வித சளைப்போ, குறைவோ இல்லாது உயர் சேவைகளை ஆற்றிவர வலு வளித்த இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக.

சகோதரி எலிஸபெத் பேக்கர் 1902-ம் ஆண்டு பெப்ர வரி மாதம் 22-ம் திகதி இங்கி லாந்தின் யோக்சயர் மாகா ணத்தில் விவசாயக் குடும்ப மொன்றிலே அவதரித்தார். நான்கு பிள்ளைகளில் கடைசிப் பிள்ளையான இவர், சிறு பரா யம் முதலே பெற்றோருடன் தம்து விவசாயப் பண்ணையில் ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபட்டுவந்தார். பள்ளிப் பரு வத்தினை மெதடிஸ்த சமயவழி முறைகளுடன் கூடியதாக கழித்ததுடன் சமய ஆசிரியை யாகவும், பாடசாலைச் சாரணீ யத்தின் தலைவியாகவும் கடமை யாற்றிவந்தார்.

1931-ம் ஆண்டு செப்டம் பர் மாதம் 6-ம் திகதி மெத டிஸ்த சபையின் சேவகியாக இலங்கைக்கு முதன்முதல்வந்த சகோதரி பேக்கர், தனது ஆரம்ப சேவைகளை கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்தார். இச்சேவைகளால் கல்முனை, மட்டக்களப்பு ஆகிய பிரதே சங்கள் நன்கு பயன்பெற்றன.

1952-ம் ஆண்டில் வடமாகா ணத்தின் புத்தூர்ப்பகுதியில் தனது சேவைகளைத் தொடர் ந்த சகோதரி, பருத்தித்துறை யில் மிஷன் வைத்தியசாலை ஒன்றினை முழுப் பொறுப்புடன் பராமரித்துவந்தார். இவ்வைத் தியசாலையில் கடமையாற்று கையில் இதற்கு 'ஆரோக்கிய இல்லம்', 'சாந்தி நிலையம்' எனப் பெயரிட்டு, அப்பகுதியி னரின் சௌக்கியங்களில் பெரும் பங்கு வகித்துவந்தார்.

மேலும் புத்தூர்ப்பகுதியில் அநாதைச் சிறுவர்களுக்கான சிறுவர் பாடசாலையொன்றினை யும், தன் சேவைக்காலத்தில் அங்கு நிறுவினார். இங்கு, வேண்டப்படாத குழந்தை கள், பிறக்கும்போதே சயரோக நோயினால் பீடிக்கப்பட்ட குழந் தைகள் போன்ற வலிமையற்ற சிறார்களை இப்பள்ளியில் சேர் த்து, அவர் தம் வாழ்வில் பெரும் பங்கு வகித்துவந்தார். இத்தகைய பெரும் மனப்பான் மையினால், அப்பகுதியினரின் மனதில் உயர்ந்த இடத்தைப் பெற்ற சகோதரி பேக்கர், புத்தூரின் புளொரன்ஸ் நைட் டிங்கேள் என அன்புடன் அழைக்கப்பட்டார்.

மெதடிஸ்த மிஷனரி சேவை களுடன், இவர் சாரணீயத் தொண்டிலும் இனிது சேவை யாற்றினர். 1958-ம் ஆண்டில் கல்முனைப்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தபோது அங்கு சாரணியாகப் பணிபுரிந் ததுமட்டுமல்லாது இலங்கைப் பெண் சாரணீயத்தின் முதிய அங்கத்தவர் என்ற பெருமையி னையும் கொண்டு விளங்குகின் ரூர்.

மெதடிஸ்த மிஷன் சேவை யில், நீண்டகால சேவைக்குப் பின்பு இளைப்பாறிய சகோ தரி பேக்கர், சிறிதுகால இடை வேளைக்காக இங்கிலாந்து சென்று, 1959ம் ஆண்டு மீண் டும் இலங்கைதிரும்பினர்.

**ஐ. பி. துரைரத்தினம்**

இலங்கை திரும்பியவுடனேயே தனது சேவைகளைத்தீவிரமாக் குவதில் முனைந்த சகோதரிக்கு வணக்கத்திற்குரிய திரு. திருமதி ஏ. ஸி. தம்பிராஜா தம்பதியினர் பக்கபலமாக நின் றனர்.

இதன்பலனக, பரந்தன் பிர தேசத்தில் 'நவஜீவன' சேவை களை ஆரம்பிக்கும்வகையில் அமெரிக்க-இலங்கை மிஷன் சேவை நிலையமொன்று தெல் லிப்பளையில் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பரந் தனில் 'நவ ஜீவனம்' இல்லம் உருவானது. இது எழுத்தறி வற்ற குழந்தைகளின் கல்வி நிலையமாகவும் உணவு, உடை உறையுள் அற்றோரின் புகலிட மாகவும் விளங்கி, மணக்கிலே சங்களுக்கும், தொல்லைகளுக் கும் உட்பட்ட இளம் சிறு வர்களுக்கு புத்துணர்வும் புது வாழ்வுமளிக்கும் கோயிலாக பரிணமிக்கத் தொடங்கியது.

1971ம் ஆண்டில் 75 பிள்ளை களைக்கொண்டிருந்த இச் சேவை இல்லம், தற்போது 200 பேரைத் தன்சேவைகளி ஞல் கவர்ந்துள்ளது. பல்வேறு இன, மதங்களைச் சேர்ந்தோ ரும் இங்கு ஒரு குடும்பமாக வாழ்ந்துவருகின்றனர். இச் சிறுர்கள் தம்து திறமைகளை தீவிர ஒழுக்கவிதிகளுக்குட் பட்டு செயற்படுத்திவருகின்ற னர்.

இந்தரீதியில் பண்ணைபரா மரிப்பு, சுமநல சேவை, கோழிவளர்ப்பு,பன்றிவளர்ப்பு மாடுவளர்ப்பு, தச்சுவேலை, டிராக்டர் ஓட்டுதல், போன்ற வற்றில் தீவிரபயிற்சி பெறுவ துடன், அவை வருவாய் களை ஈட்டும்வகையில் பரா மரித்துவருகின்றனர்.

''நவஜீவனம்'' இல்லத்தை அண்டிய பகுதிகளில், விளை யாட்டு மைதானம். ஆங்கில மொழிப் போதனை நிலையம் போன்றவற்றை நிறுவியுள்ள சகோதரி பேக்கர் அப்பகுதி மக்களை இவற்றில் சிரத்தை காட்டும்வகையில் ஈடுபடுத்தி வருகின்ருர்.

இவ்வாறு தன்வாழ்வினைத் தன்பெரும் எஜமானுகியஇறை வனிடம் சரணடையச்செய்து, மாந்தருள், சாதாரணமாத ராய்த் தன்வாழ்வை நடாத்தி உணர்விலும் எல்லாம் வல்ல சேவகனின் சேவகியாய் தன்னை உருவகித்து வாழ்வை நடாத்தி வருகின்ருர், சகோதரி எலி செபத்பேக்கர்.

## கிழக்கு மாகாணத்தில் அம்மையாரின் சேவை

கல்முனைப் பகுதியில் தமது சமயப் பணியை ஆரம்பித்த பேக்கர் அம்மையார் கல்முனை பெண்கள் விடுதிப் பாடசாலை யின் தலைவியாக நியமனம் பெற்ருர். இப்பாடசாலையில் பதவியை ஏற்ற அம்மையார் மழலைத் தமிழில் பேசி; ஆங் கில பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் பணியுடன் தனது சுவிசேஷப் பணியையும்செய்து வந்தார் கல்முனைச் சபை யைச் சேர்ந்த கல்லாறு, நிலா வணை, குறும்மண்வெளி ஆகிய பகுதிகளிலுள்ள சபைகளிலும் தனது ஊழியத்தை மேற் கொண்டார்.

தனது மிஷனரி ஊழியத்து டன் வெளிக்காற்றுக்கூட்டங் களை நடாத்தியும், வீடுகளைச் சந்தித்தும், தையல் வகுப்பு கள் நடத்தியும்,பிள்ளைவளர்ப் புப் பற்றி போதனை வகுப்புகள் நடத்தியும் சமூக சேவைகளைச் செய்துவந்தார். இதனுல் கல் முனையின் அயற் கிராமங்க ளான பாண்டிருப்பு, நற்பிட்டி முனை காரைதீவு. சம்மாந் துறை, வீரமுனை, மருதமுனை, சாய்ந்தமருது ஆகிய பகுதிக ளிலுள்ள மக்களின் அன்புக் குப் பாத்திரமாக விளங்கிஞர். கல்முனை விடுதிப் பெண்கள் பாடசாலையின் தலைவியாகப் பணியுரிந்த காலத்தில் மாண விகள் வழிகாட்டி இயக்கத் தையும், கிறிஸ்த இளம்பெண் கள் சங்கத்தையும் ஆரம்பித்து அவைமூலம் பெண்களை சமூக சேவையிலீடுபட வழிவகுத் தார். குதிச் சப்பாத்தும். கொட்டான் சட்டையும் போடாமல் நம்மவர்களைப் போல சேலையுடுத்து, கிராமத் தவர்களோடுகூடிப் பழகி, சிரித் துப்பேசி. சிநேகிதர்களின் வாழ்விலும் தாழ்விலும் அவர் கள் வீடுகளுக்குச் சென்று பந்திபோசனமருந்தி, கைகூப்பி வணக்கம்செலுத்தி எல்லோ ரையும் மகிழ்வித்துவந்தார்.

யாழ்ப்பாணம் புத்தூர் பகு தியின் மிஷனரியாக 1933-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட அம் வையார் புத்தூர் வைத்திய சாலையில் வைத்தியராகவும், ஆலயத்தில் ஊழியக்காரியாக வும் சிறப்புடன் சேவையாற்

**எஸ். பி. ஜீவரத்தினம்**
ஈழநாடு நிருபர்

றினர் இவரின்சேவை 1937ம் ஆண்டுவரை புத்தூர்ப்பகு திக்குக் கிடைத்தது. 1938-ம் ஆண்டு கிழக்கு மாகாண சுவிசேஷ ஊழியக்காரியாக நிய மனஞ் செய்யப்பட்ட அம்மை யார் மட்டக்களப்பு, திருகோ ணமலை ஆகியபகுதிகளில் சிறப் புடன் தனது இறைபணியை மேற்கொண்டார். அம்மை யார் 1951-ம் ஆண்டு புத்தூர் வில்சன் சிறுவர் வைத்தியசாலை யின் பொறுப்பாளராக நிய மனஞ் செய்யப்பட்டார். இவ ருடைய அளப்பரிய சேவையின் மூலமே புத்தூர் வைத்திய சாலை விஸ்தரிக்கப்பட்டதுடன் இவ்வைத்தியசாலையின் மூலம் இப்பகுதி மக்கள் பெரும் நன்மைகளை அடையத்தொடங் கினர்.

1959-ம் ஆண்டு சித்திரை மாதம் 29ந் திகதி பரந்தனில் நவஜீவனம் என்ற புதிய ஜெப ஆலயமும், விடுதியும் அமைக் கப்பட்டது. இந்த விடுதியில் தனது ஊழியத்தை ஆரம்பித்த அம்மையார் இங்கு சிறந்த வைத்தியராகவும், ஞாயிறு பாடசாலை ஆசிரியராகவும், மாலைநேர பாடசாலையின் ஆங்கில போதனசிரியையாக வும் பணிபுரிந்துவந்தார். நவ ஜீவ னத்தில் 200 சிறுர்களைக் கொண்ட மாணவ, மாணவி களின் விடுதியின் தலைவியாக வும், வைத்தியராகவும் பணி புரிந்துவருகிருர்.



நவஜீவனத்தைச் சேர்ந்த வண. பிதா. அ. செ. தம்பிராசா, திருமதி அருளம்மா ஆகியோருடன் சகோதரி எலிசபெத் பேக்கர்

இறைபணியை நவஜீவனத் தில் ஆரம்பித்த அம்மையார் தமது சேவைக்கெனத் தேர்ந் தெடுத்த மற்ருேர் வழி இல ங்கை தேசிய கயரோகத் தடைச் சங்கமாகும். கடந்த கால் நூற் ருண்டு காலமாக தனித்தும், சங்கம் மூலமும், அவர்செய்து வரும் கயரோகத்தொண்டு தனித்துவமானதாகும். கய ரோகத் தாய்ச்சங்கத்தின் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ்ப்பிரதேசப் பிரதிநிதியாக வும், யாழ். மாவட்ட சங்கத் துணைத்தலைவராகவும், கரைச் சிப்பகுதி கயரோக கிளைச்சங்க காப்பாளராகவும் அம்மை யார் பணிபுரிந்துவருகிருர்

கயரோகிகள் எங்கிருந்தா லும் அவர்களைத்தேடிச்சென்று அவர்களை வைத்தியசாலைக்கு அனுப்புவதுடன், அவர்கள் குழந்தைகளை நவஜீவனத்தின் விடுதியில் தங்கியிருந்து படிக்க வசதிசெய்துகொடுப்பார். அம் மையாரின் மகத்தான இப் பணியை கிளிநொச்சி, தரும புரம் பகுதியில் வாழும் மக்கள் என்றும் மறக்கமுடியாது. தொழுநோயாளர்களுக்கு தாயாக மதர் திரேசா அம்மை யார் விளங்குவதுபோல கய ரோகிகளின் தாயாராக சகோ தரி எலிசபெத்பேக்கர் அம்மை யார் விளங்குகிருர்.

அம்மையாரின் சமூக சேவைப்பணியைப் பாராட்டி பிரித்தானிய மகாராணியார், இலங்கையிலுள்ள இங்கி லாந்து உயர் ஸ்தானிகர் மூலம். 1957ம் ஆண்டு தை மாதம் 27ந் திகதி பிரித்தானி யாவின் உயர்கௌரவப்பட்ட மான எம். பி ஈ பட்டத்தை வழங்கினர் சகோதரி எலிசபத் பேக்கர் அம்மையார் ஊழியத் தின்பிறப்பிடமாகவும், சேவை யின் இருப்பிடமாகவும் ஆற்றி வரும் பணியை ஈழநாட்டு மக் கள் என்றும் மறக்கமுடியாது.

## புதுவாழ்வு தந்த அம்மையார்

நவஜீவனத்தில் இன்று நல் விழா, நாடுபோற்றும் பெரு விழா. பொதுப்பணிபுரிந்த அம்மையாரின் பொன்விழா குழந்தைகளின் சோலவிழா. சகோதரி எலிஸபெத் அம்மை யார் சரித்திரம் படைத்த விழா. யார் இந்த எலிஸபெத் பேக்கர் அம்மையார்?

உயர்ந்த, நிமிர்ந்த தோற் றம். தூய வெண்ணிறச்சேலை, சட்டை. துன்பம் துடைக்கும் கரங்கள். புன்னகை பூத்த முகம்- பொன்மலர் போன்ற மென்னிறம். மழலைத் தமிழ்

**ஏ. கே. இராஜேந்திரம்**

பேசும் வாய் -மறக்கமுடியாத பேச்சு. சமூக சேவைக்காகச் சைக்கிள் ஓடியும் தளராத உடல். புகலிடம் அற்ருேருக்கு புதுவாழ்வு தரும் நவஜீவனத் தின் தலைவி, இவர்தான் எலிஸ பெத் அம்மையார்.

ஆங்கில நாட்டில் பிறந்தார். ஈழநாட்டிற்குவந்தார். ஐம்பது ஆண்டுகள் அரும் பணிகள் புரிந்தார். கல்முனையில், மட் டக்களப்பில், திருகோணமலை யில், புத்தூரில் புரிந்தசேவை கள் பல. இறுதியில் இருபத்து மூன்று ஆண்டுகள் நவஜீவனத் தில் காய்த்து முற்றிக் கனியாகி உள்ளார். நவஜீவனத்தின் ஸ்தாபகர், நலிவுற்ருேரின் நற்தாய், ஆங்கிலம் புகட்டும் ஆசிரியை, ஆருத நோயாளி களின் அரும் டாக்டர், குழந் தைகள் கொண்டாடும் தாய், குடும்பத் தலைவியரின் வழி காட்டி, அநாதைக் குழந்தை களின் அம்மா, அங்கவீனரின் அடைக்கல நாயகி, தொழிலற் ருேரின் தொழில் வழிகாட்டி வாழவழியற்ருேரின் வாழ் வூற்று! இப்படி வாழ்கிருர் எலிசபெத் அம்மையார்.

என்றும் தலைவியாக விளங்கு பவர் எலிசபெத் பேக்கர் அம் மையார் நாற்பத்தைந்து ஆண்டுகள் மகளிர் சாரணீயத் தலைவி, இருபத்தைந்து ஆண்டு கள் தாய்சேய் பராமரிப்புத் தலைவி. பத்துஆண்டுகள் கய ரோகத் தடைச்சங்கத்தலைவி. இருபத்துமூன்று ஆண்டுகள் நவஜீவனத் தலைவி; ஐம்பது ஆண்டுகள் ஆண்டவன் பணி புரியும் அருமைத்தலைவி அன்னை யார் செய்த பணிகள் ஆயி ரம். அதற்கு உயிரோடு, உரிமையோடு, உத்தியோகத் தோடு வாழும் பலர் சாட்சி. தம்து சொத்தைச், சுகத் தைப் பதவியை, ஏழை எளி யோர்க்கு அநாதைகளுக்கு யாருமற்ற கொடிய நோயாளி களுக்காகத் தியாகம் செய்த வர் பேக்கர் அம்மையார்.

## 'மினி' பஸ்களில் மேலதிக பயணிகள்

(கொழும்பு)

போக்குவரத்து நெருக்கடி காரணமாக தனியார் நடாத் தும் 'மினி' பஸ்களில் கணிச மான மேலதிக பிரயாணிகளை ஏற்ற அனுமதிப்பது சம்பந்த மாக போக்குவரத்து அமைச்சு பாதுகாப்பு அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

அமெரிக்க - இந்திய தூதரக அதிகாரி நியமன இழுபறி

# உளவு வேலையில் ஈடுபட்டவரை ராஜதந்திரியாக ஏற்கமுடியாது

## பிரதமர் இந்திரா விளக்கம்

புதுடில்லி, செப். 5

உளவுவேலையில் ஈடுபடும் ஒருவரை எமது நாட்டில் நாம் தூதரக ஏற்றுக்கொள்ளமுடியாது. எனவேதான் புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் அரசியல் ஆலோசகராக நியமிக்கப்பட்ட ஜோர்ஜ் கிரிப்பின் என்பவரின் நியமனத்தை இந்தியா ஏற்கவில்லை.

ஒரிஸா மாநிலத்தில் சுற்றுப் பயணம்செய்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பத்திரிகையாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நடவடிக்கையின் எதிரொலியாகவே அமெரிக்காவும் அங்குள்ள இந்திய தூதரகத்திற்கு நாம் நியமித்த தூதரக அதிகாரியை அங்கீகரிக்க மறுத்துவிட்டது. எமது தூதரக அதிகாரியுடன் அமெரிக்க அதிகாரியை ஒப்பிட முடியாது என்றும் திருமதி காந்தி கூறினார்.

மேபடி ராஜதந்திரியை ஏற்க இந்தியா மறுத்தமைக்கு திருமதி காந்தி மேற்கண்ட காரணத்தைக் கூறியதைத் தொடர்ந்து அமெரிக்கா மற்றொரு காரணத்தைத் தெரிவித்துள்ளது.

வல்லரசு ஒன்றின் தூண்டுதல்...

வெளிநாட்டு வல்லரசு ஒன்றின் தூண்டுதலின் பேரிலேயே அமெரிக்க ராஜதந்திரியின் நியமனத்தை இந்தியா நிராகரித்துள்ளது என்று அமெரிக்கா கூறியுள்ளது. (இ)

## கருணாநிதி கார் மீது தாக்குதல்

திருச்சி, செப். 5

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி பயணம்செய்த கார் தூத்துக்குடியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் தாக்குதலுக்குள்ளானது.

இத்தகவலை திரு கருணாநிதி திருச்சியில் நிருபர்களிடம் தெரிவித்தார். (இ)

## இந்திய ஆசிரியர் தினம் இன்று

புதுடில்லி, செப். 5

இந்தியாவில் இன்று ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

## பால் விற்க மறுப்பு

சென்னை, செப். 5

தமிழ்நாடு பெரியார் மாவட்டத்தில் எவருக்கும் பால் விற்பதில்லை என்று விவசாயிகள் முடிவுசெய்துள்ளதைத் தொடர்ந்து பாவனையாளர்கள் பெரும் அவதிப்படுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இலங்கை வன்செயல்

★ சர்வதேச விசாரணைக் கமிஷன் ★ சர்வதேச நீதிமன்ற விசாரணை

# இந்தியாவிலுள்ள தூதுவரிடம் மாணவர்கள் வற்புறுத்து

### ஊர்வலம் நடத்தி மகஜர் கையளிப்பு

புதுடில்லி, செப். 5

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகம் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய இலங்கைத் தமிழ் மாணவர்களும் இந்தியத் தமிழ் இளைஞர்களும் மாணவர்களும் தூதரகத்திற்குச் சென்று மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

● இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிராக இடம்பெற்ற வன்செயல் சம்பவங்கள் குறித்து சர்வதேச விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டும்.

● ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றம் இலங்கை வன்செயல்கள் குறித்து விசாரணை நடத்தி ஆறு மாத காலத்திற்குள் அறிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்

● தமிழ் மக்களுக்கெதிரான கொடுமைகள் நிறுத்தப்படவேண்டும்.

● அவர்களது உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பளிக்கவேண்டும்.

இவை உட்பட சில கோரிக்கைகள் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

தூதரக அதிகாரி பதில்

இவர்களின் மகஜரை ஏற்றுக்கொண்ட இலங்கைத் தூதரக அதிகாரி, 'உங்களது கோரிக்கைகளையும் உணர்ச்சிகளையும் எமது அரசின் கவனத்துக்குக் கொண்டுவருவேன்' என ஊர்வலத்தில் வந்தவர்களிடம் உறுதி அளித்தார். (இ)

## முகமாலை கொலைவழக்கு:

# 'சாரதியின் காலைப்பிடித்து கழுத்தையும் நெரித்தார்'

### லொறிக்கிளீனர் சாட்சியம்

(சாவகச்சேரி)

முகமாலை வேதக்கோவிலுக்கு சமீபமாக வந்து நடு றோட்டில் நின்று நிற்பாட்டுமாறு லொறியை மறித்தனர். சாரதி நிற்பாட்ட ஒருவர் சாரதியின் காலைப்பிடித்து அவரின் கழுத்தையும் நெரித்தார். அவர் ஐயோ என்னை ஒன்றும் செய்யாதையுங்கோ எனக் கத்தினார்.

முகமாலை கொலைவழக்கில் சாட்சியமளித்த லொறிக் கிளீனர் இன்னாசித்துரை தம்பிராசா சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி சி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் முகமாலையில் காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன லொறிச்சாரதி செ. விஜயரத்தினத்தைக் கொலைசெய்ததாக பி. தர்மலிங்கம், செ. தவராசா ஆகியோர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும், எதிரிகள்சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி சிவலோகநாதனின் உதவியுடன் ஆஜரானார்.

தம்பிராசா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

1963ம் ஆண்டு தொடக்கம் நான் காங்கேசன்துறைக் கூட்டுத்தாபனத்தில் லொறிக் கிளீனராகக் கடமையாற்றினேன்.

சாரதி செல்லையா விஜயரத்தினம் என்பவருடன் எமது பொறுப்பதிகாரியின் பணிப்புரையின்பேரில் யுத்தகத்துக்கும் போகப் பகல் 12 மணியளவில் புறப்பட்டோம். கொடிகாமத்தில் இருவர் எங்கள் லொறியில் ஏறிக்கொண்டனர். மிருசுவில் கடந்து அரைமைல் தூரம் சென்றதும் வேறு ஒரு லொறிக்கு விலத்திச்செல்ல இடம் கொடுத்தபோது எங்களுக்கும் அந்த லொறிச் சாரதிக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. பின்னர் தொடர்ந்து அப்பால் செல்லும்பொழுது இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பஸ் ஒன்றும் சைக்கிளில் இருவரும் வந்து கொண்டு இருந்தனர். சாரதி லொறியை மெதுவாகச் செலுத்தித் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தோம். சிறிது தூரத்தில் ஒரு மினி பஸ்ஸிலிருந்து இருவர் இறங்கி முகமாலை வேதக்கோவிலுக்குச் சமீபமாக நடு றோட்டில் நின்று நிற்பாட்டுமாறு லொறியை மறித்தனர். சாரதி நிற்பாட்ட ஒருவர் சாரதியின் காலைப்பிடித்திழுத்து அவரின் கழுத்தையும் பிடித்து நெரித்தார். அவர் ஐயோ என்னை ஒன்றும் செய்யாதையுங்கோ எனக் கத்தினார். மற்றவர் பக்கத்திலுள்ள வேலியில் நாலுவிரல் தடிப்புள்ள கலார் மூன்று அடி நீளமுள்ள ஒரு கதியால் முறித்து இரண்டு மூன்றடி அடித்தார். சாரதி விஜயரத்தினம் லொறியின் சைட் கண்ணாடியைப் பிடித்தபடி பின் நிலத்தில் விழுந்தார்.

நான் உடனே சற்று நடந்து சென்று பின் ஒரு வானில் ஏறிச் சென்று பளைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று நடந்த வற்றைப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கூறினேன். உடனே மூன்று பொலிசுடன் பொறுப்பதிகாரியும் நானும் ஜீப்பில் வந்து சாரதி விஜயரத்தினத்தைச் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். அப்போது டாக்டர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு அவர் இறந்துவிட்டதாகவும் பிரேத அறையில் அவரைப் போடுமாறும் கூறினார்.

பின்னர் அதே ஜீப்பில் என்னைக் கூட்டிச் சென்று எனது வாக்குமூலத்தைப் பதிந்தார்கள்.

நீதிபதி லொறியில் இவர்கள் ஏற்றிய ஆட்கள் இவரைப்பற்றி விசாரித்தபொழுது சம்பவம்நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது அவர்கள் மெல்ல இறங்கி நழுவிவிட்டதாகவும் தான் அவர்களைப் பற்றி மரண விசாரணையிற் கூறவில்லை என்றும், சந்தேக நபர்களின் அடையாள அணிவகுப்பின்போது சந்தேக நபர்களை அடையாளம் காட்டியதாகவும் குறிப்பிட்டார்.

இம்மாதம் 25ம் திகதிக்கு நீதிபதி வழக்கை ஒத்திவைத்தார். எதிரிகள் இருவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (க)

## சர்வதேச புத்தக சந்தை

மாஸ்கோ, செப். 5

புத்தக வெளியீட்டாளர்களது சர்வதேச புத்தக சந்தை கடந்த 2ம் திகதி இங்கு ஆரம்பமானது. 8-ம் திகதிவரை இச்சந்தை நடைபெறும்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இச் சர்வதேச புத்தகச்சந்தை இதுவரை இரண்டு தடவைகள் இங்கு நடைபெற்றபோதிலும் இச் சந்தை சர்வதேச புத்தக வர்த்தகத்தின் மிகப் பெரிய கேந்திரங்களில் ஒன்றாக மாறியுள்ளதுடன் பரவலான வர்த்தகவட்டாரங்களினால் அங்கீகரிக்கப்பட்டுப் பாராட்டப்பட்டுமுள்ளது.

"அமைதிக்கும் முன்னேற்றத்திற்கும் பணிபுரியும் புத்தகங்கள் என்ற மகுடத்தின்கீழ் நடைபெறும் இப் புத்தகச் சந்தையின் வெற்றிக்குக் காரணம், பரந்தளவில் உலக நாடுகள் இதில் பங்குபற்றுவதே. 1977ல் நடைபெற்ற இச் சர்வதேச புத்தகச்சந்தையில் 67 நாடுகளின் 1,535 நிறுவனங்களின் பிரதிநிதிகளும், 1979ல் 75 நாடுகளிலிருந்து 2,290 புத்தக வெளியீட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்குகொண்டனர்.

வெளிநாட்டு இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்படுவதையும் வெளிநாடுகளில் பிரசுரிக்கப்பட்ட நூல்களை தருவித்து விற்பனை செய்வதையும் சோவியத் யூனியன் அதிகரித்துவருகிறது. யுனெஸ்கோ அறிக்கையின்படி, மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் அதிகமாக வெளியிடப்படுவது சோவியத்யூனியனில்தான்.

3வது சர்வதேச புத்தகச் சந்தை 25,000 சதுரமீட்டர் பரப்பில் நடைபெறுகிறது. 80 நாடுகளிலிருந்து 2,000 நிறுவனங்களும் 11 சர்வதேச ஸ்தாபனங்களும், பலவிதமான விற்பனை இயக்கமும் இதில் கலந்துகொண்டுள்ளன. இச் சர்வதேச புத்தகச்சந்தையின் போது, புத்தக அமைப்பு, இலக்கியப் பாதுகாப்புபற்றிய புத்தகக் கண்காட்சிகளும் நடைபெறுகின்றன.

## நமீபிய விவகாரம்

# ஐ. நா. கூட்டத்திலிருந்து தென் ஆபிரிக்கா வெளியேற்றம்

நியூயோர்க், செப். 5

நமீபிய விவகாரம் குறித்த அவசர கூட்டத்திலிருந்து தென் ஆபிரிக்காவை ஐக்கிய நாடுகள் பொதுச்சபை வெளியேற்றியுள்ளது.

தென் ஆபிரிக்காவை வெளியேற்றும் தீர்மானத்திற்கு 117 நாடுகள் ஆதரவாகவும் 22 நாடுகள் எதிர்த்தும் வாக்களித்தன. 6 நாடுகள் நடுநிலைமைவகித்தன.

## "அதிகாரிகள்

# பல்துறைத் திட்டங்களிலும் கவனம் செலுத்தவேண்டும்'

[யாழ்ப்பாணம்]

"பல்வேறு துறைகளிலும் பயனடையக்கூடிய திட்டங்களைத் தயாரிப்பதில் அதிகாரிகள் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டும்" என்று யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் தைதவேதற்குழு உறுப்பினர் திரு எஸ், நாகராசா தமது நிர்வாகத்துக்குட்பட்ட திணைக்கள அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

காணி, நீர்ப்பாசனம், மேலதிக சேவைகள் விவசாயம் ஆகிய திணைக்களங்களைக் கொண்ட மாவட்ட அபிவிருத்தி சபையின் பிரிவுக் குழுக்கூட்டம் யாழ் செயலகத்தில் திரு. எஸ் நாகராசா தலைமையில் நடைபெற்றது.

"யாழ்மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அதிகாரிகள் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்ட திரு நாகராசா அதிகாரிகளுடைய ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதி வசதிகளை ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். இவர்களுக்குச் சபையின் ஒத்தாசை நிச்சயம் கிடைக்குமென்று தலைவர் உறுதி அளித்தார்

"விவசாய உற்பத்தி நீர்ப்பாசன வசதிகள் விவசாயிகளுக்கான மின்சார வசதிகள் செய்து கொடுப்பது பற்றியும் திரு நாகராசா வலியுறுத்தினார் [மா]

## வருடாந்த உற்சவம்

(வேலணை)

வேலணை மடத்து இலந்தை வனம் சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 1ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுகிறது.

இம்மாதம் 10ம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழா. அன்று மாலை தீர்த்தத் திருவிழாவுடன் உற்சவங்கள் முடிவடையும்.

உற்சவ காலத்தில் தினமும் வேலணை இந்து வாலிப சங்கத்தின் போஷகர் திரு. வே. இராசதுரை தலைமையில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது [இ]

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30
தாயில்லா குழந்தை

கடைசி வாரம்
ராஜா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சாந்தபாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)

## முதல்நாளே 3 லட்சம் ரூபா

(புலோலி)

பருத்தித்துறையில் புதிதாகத் திறந்துவைக்கப்பட்ட மக்கள் வங்கிக்கிளையில் ஆரம்ப நாளன்றே மூன்று லட்சம் ரூபா வைப்புப் பணமாகச் செலுத்தப்பட்டுள்ளதாக வங்கிமுகாமையாளர் திரு. சிவலிங்கம் தெரிவித்தார்.

அன்று நடைமுறைக் கணக்கு, சேமிப்புக்கணக்கு உட்பட 100 கணக்குகள் பொது மக்களால் ஆரம்பிக்கப்பட்டன.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சி
சிவகுமார் - லட்சுமி
அவன்- அவள் அது (ஈஸ்ட்மன்கலர்)

றியோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சாந்தி
சில தினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 10-30, 2-30, 6-00 & 9-45
சிவாஜி - எஸ். எஸ். ஆர். - தங்கவேலு
பத்மினி-எம். என். ராஜம்.
'தெய்வப் பிறவி'
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

கடைசி வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர். ★ லதா
பல்லாண்டு வாழ்க
(ஈஸ்ட்மன் கலர்)

4 வது வாரம்
ஒரு பெண்ணுக்கு துணிவு இருந்தால்மட்டும் போதாது
துணையும் வேண்டும் என்பதை
சித்தரிக்கும் சித்திரம்தான்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ஸ்ரீபிரியா ★ராதாசலூஜா ★தேங்காய்
★ நம்பியார் நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

3-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி — துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
When Time Ran Out

REGAL — "ஹவுஸ்புல்" காட்சிகளாக DAILY 5 SHOWS
— புரூஸ்லியின் சாகஸம்.
FIST OF FURY
—"புரூஸ்லி கொலைகாரன் ஆகியதன் மர்மம் என்ன? அவனால் கொலை செய்யப்பட்டவர் ஆயிரக்கணக்கில்...?"

## புஞ்சிநிலமே கட்சியிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்

(கொழும்பு)

ஜனாதிபதியினால் பதவிநீக்கம் செய்யப்பட்ட பிரதேசஅபிவிருத்தி, இந்துசமயம், இந்து கலாசாரம், தமிழ்மொழி அமுலாக்கல் பிரதி அமைச்சர் திரு. ஜி. வி. புஞ்சிநிலமே ஐக்கியதேசியக்கட்சியிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்.

திரு. புஞ்சிநிலமே பிரதி அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டதை அடுத்து அவர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவாரா? என நிருபர்கள் கேட்டபோது கட்சியின் செயலாளர் திரு. ஹரிஷ்சந்திர அபயவர்த்தன தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்.

திரு. புஞ்சிநிலமேயை கட்சியிலிருந்து விலக்கும்நோக்கம் எதுவும் கட்சிக்குக் கிடையாது. எம். பி. பதவியில் இருந்தும் அவர் வெளியேற்றப்படமாட்டார். (ம-இ)

## சீமெந்து தொழிற்சாலையில் 325 பேர் வேலைநீக்கம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் தொழில் வங்கி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்ட சுமார் 325 தொழிலாளர்கள் திடீர் வேலைநீக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு கடந்த சில மாதங்களின் முன்பு யாழ். மாவட்ட அமைச்சின் தொழில் வங்கி மூலம் வேலைகள் வழங்கப்பட்டபோது ஏராளமானோர் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

ஆனால் இவர்கள் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலேயே சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். தற்போது ஒப்பந்தம் முடிவடைந்தமையால் வேலைநீக்கம் செய்யப்படுகிறார்கள் என இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்களில் சிலர் வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடமாகாதபோதிலும் வேலைநீக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

வேலையிழந்து நிர்க்கதியாகியுள்ள மேற்படி 325 தொழிலாளர்களும் செய்வதறியாது திகைப்படைந்துள்ளனர்.

## சங்கீத, நடன, நாடகப்போட்டி

(உடுப்பிட்டி)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான சங்கீத, நடன, நாடகப்போட்டிகள் இம்மாதம் 11, 12-ம் திகதிகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம்மாவட்டத்தில் வட்டாரரீதியில் நடாத்தப்பட்ட போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்றுக்கொண்ட பாடசாலைகள் பங்கு பற்றுகின்றன.

மாவட்டப் போட்டிக்கான ஒழுங்குகளை கல்வி அதிகாரி திரு. எஸ். ஆர். நவரட்ணசிங்கம் மேற்கொண்டு வருகின்றார். (இ)

## இளைஞர்மன்ற இசைப்பிரிவில் அதிக தமிழ்க் கலைஞர்கள்

[மாவிட்டபுரம்]

தேசிய சேவை இளைஞர் மன்ற இசைப் பிரிவில் அதிக தமிழ் கலைஞர்களுக்கும் இடமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய சேவை இளைஞர் மன்ற இசைப் பிரிவில் சிங்கள இசைக் கலைஞர்களே அதிகமாக இடம் பெற்று வந்தனர், தமிழ் கலைஞர்கள் ஓரிருவர் மட்டுமே இடம் பெற்றனர்.

மேற்படி பிரிவில் போதிய தமிழ்க் கலைஞர்கள் இடம் பெறாமையால் தமிழ் பகுதிகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்த முடியாமலிருப்பதை படுத்தும், இங்கை பகுதிகளிலும் தமிழ்க் கலைகளைப் பரப்பி அவர்கள் தமிழ்க் கலைகளை ரசித்து மதிக்கச் செய்யவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பரத நாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம், தவில் போன்ற சகல தமிழ் கலைகளையும் மேற்படி இசைப் பிரிவில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மக்கள் பிரச்னை

## கட்சிவேறுபாடற்ற பேச்சுவார்த்தை அவசியம்

### முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தீர்மானம்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்ற வன்செயல்களுக்கு சூத்திரதாரிகளாக இருந்த சமூக தேசிய விரோதிகளுக்கு கடும் தண்டனை விதிக்கவேண்டும்.

இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க தேசிய சபையின் செயலகக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின் விபரம் வருமாறு:

நாட்டின் பல்வேறு பாகங்களில் அண்மையில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக்கலவரங்கள், வன்செயல்களுக்கு பின்னாலுள்ள சூத்திரதாரிகளை நாம் வன்மையாகக் கண்டிக்கும் அதேநேரத்தில் இந்த சமூக-தேசிய விரோதிகள் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படவேண்டும் எனக் கோருகிறோம். பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் தகுந்த நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும், அகதிகளாக்கப்பட்டோருக்கு அவர்களின் விருப்பப்படி புனர்வாழ்வளிக்க ஆவன அனைத்தையும் செய்து கொடுக்கவேண்டுமென்றும் அரசைக் கோருகிறோம்.

வன்செயல்கள் ஈழத்து வாழ்வின் ஒரு நாளாந்த அம்சமாகி வரும் இன்றைய நிலையில் இதற்கு உடனடியாகவும் என்றென்றைக்குமாகவும் முற்றுப்புள்ளி வைக்க உறுதியான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம். இருபக்கப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியிருப்பதை நாம் வரவேற்கும் அதேவேளையில் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு அர்த்தமும், சாத்தியமும் அளிக்கும்விதத்தில் இதை அரசியல், கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நாட்டின் அனைத்து தேசிய சக்திகளையும் உள்ளடக்கிய விரிவுத்தில் பரந்தஅடிப்படையில் நடத்துமாறு கோருகிறோம்.

தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளையும் ஜனநாயகக் கோரிக்கைகளையும் ஏற்பதன் அடிப்படையிலும், தமிழினம் இந்த நாட்டில் ஒரு தேசிய இனமாக சுதந்திரம், சமத்துவம் என்ற உன்னதமான ஜனநாயகக் கோட்பாடுகளின் ஆதாரத்தில் பிரதேசசுயாட்சி ராஜ்யத்துவம் பெற்று வாழவும் வளரும் நடைமுறையில் வகைசெய்வதே பிரச்னைக்கு நிலையான தீர்வுகாண்பதற்கான ஒரேமார்க்கம் என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இந்த நாட்டின் பிரஜைகள் தேசத்தின் எந்தப் பகுதியிலும் அமைதியாகவும், கௌரவமாகவும், பாதுகாப்புடனும் வாழ உரிமையுள்ளவர்கள் என்பதையும், எந்த நாகரிக சமுதாயமும் பிரஜைகளுக்குள்ள இந்த மீறமுடியாத அடிப்படை உரிமையை ஊர்ஜிதப்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்

## விக்கியின் மறைவு பேரிழப்பு

ஈழத்து இடதுசாரி இயக்கத்தின் மூலவரும், சோஷலிச கருத்துக்களை இந்த நாட்டுக்கு முதல்முதலில் அறிமுகப்படுத்தியவருமான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் மறைவு ஈழத்து முற்போக்கு இயக்கத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் (இ)

## தச்சுவேலைப் பாடசாலையில்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயிலுள்ள அரசாங்க தச்சுவேலைப் பயிற்சிப் பாடசாலையில் இரவு வேளையில் சுமார் 17 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன. பயிற்சிப் பாடசாலை மண்டபத்திலுள்ள களஞ்சிய அறையினுள் யன்னல் கம்பிகளை பிரித்து உட்சென்ற திருடர்கள் அங்கிருந்த வாள்கள், உளிகள் உட்பட சுமார் 17 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உபகரணங்களை கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்திருட்டுச் சம்பவம் பற்றி யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸ் சார்ஜன்ட் திரு. தில்லைத்துரை தலைமையிலான பொலிஸ் கோஷ்டி சம்பவத்திடத்துக்குச் சென்று விசாரணை நடத்தியது. (இ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(புத்தளம்)

பொலிசாருக்கு பல நாட்களாக டிமிக்கி கொடுத்துவந்த ஆசாமி ஒருவரை புத்தளம் பொலிசார் துப்பாக்கியுடன் கைதுசெய்துள்ளனர்.

மூன்று நபர்களை சுட்டுக் கொலைசெய்துவிட்டு பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்திருந்த இவர் தப்போவாவிற்கு அண்மையிலுள்ள காட்டுப் பகுதியில் குடிசை ஒன்றில் ஒளித்திருந்தபோதே பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார். (இ)

நாகம்ஸ் (கல்முனை)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஸ்ரீதேவி
பட்டாக்கத்தி பைரவன்

யாழ். நகரில்

கொழும்பு விலைகளுக்கமைய
இரும்புக்கம்பிகள்,
3/8, 5/8, 1/2"
கூரைத்தகடுகள், நீர்இறைக்கும்
மோட்டர்கள்
பெறுவதற்கு நாடுங்கள்
நேரடி இறக்குமதியாளர்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1-2, மொம்சாக் பில்டிங்
ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்

# சிறையிருந்த கணவருடன் ஒட்டிக்கொண்ட மனைவி!

லண்டன், செப். 5

சிறையிலிருக்கும் தமது கணவனைப் பிரிந்திருக்க விரும்பாத இளம் மனைவி ஒருவர் கணவரைப்பார்க்க சிறைக்குச் சென்ற போது பிரிக்க முடியாத ஒருவகை பசையினால் கணவரின் உடலுடன் தமது உடலையும் ஒட்டிக் கொண்டார்.

இவர்களைப் பிரிக்க நீண்ட நேரமாக முயன்ற சிறை அதிகாரிகள் இறுதியில் ஆஸ்பத்திரிக்குச் சென்று சத்திர சிகிச்சை மூலம் அவர்களைப் பிரித்தெடுத்தனராம்.

இச்சம்பவம் லண்டனில் உள்ள சிறை ஒன்றில் இடம் பெற்றது.

குற்றம் ஒன்றுக்காகச் சிறை சென்ற தமது கணவரை மன்னித்து விடுதலை செய்யுமாறு பலதடவைகள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து வழமை போல் தமது கணவரைப் பார்வையிடச் சென்ற மனைவி வச்சிரம் போன்ற பசை ஒன்றினால் கணவனின் உடலுடன் தமது உடலையும் சேர்த்து ஒட்டிக் கொண்டார். [இ]

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி

புதிய வகுப்புகள்
A/L 83 பரீட்சைக்கான 82 மீட்டல்
தாவரவியல்:- சிவவீரசிங்கன்
விலங்கியல்:- ஜெகானந்தகுரு
இரசாயனம்:- அன்ரன்
பௌதிகம்:- கலாபரன்
விவசாயம்:- இராஜேந்திரா
தூய/ பிரயோக கணிதம்:-
A. பத்மநாதன்
5-9-81-ல்ஆரம்பமாகிவிட்டது

# "தோட்டம் சென்றவர் வீடுதிரும்பவில்லை"

## மரண விசாரணையில் தகவல்

[சாவகச்சேரி]

"வீட்டிலிருந்து காலையில் மிருசுவில் வடக்கிலேயுள்ள தோட்டத்திற்குப்போன விநாசி குணரத்தினம் இரவு வீட்டிற்கு திரும்பவில்லை, அவர் தோட்டத்திலே பலகாயங்களோடு இறந்து கிடந்தார்"

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த விநாசி குணரத்தினம் என்பவரின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

மாவட்ட நீதிபதி சி. வி. விக்கினேஸ்வரன் மரண விசாரணை நடத்தினார். சந்தேகநபர்கள் எவரும் இதுவரை காணாதாகவில்லை. பிரேத பரிசோதனை செய்ய உத்தரவிட்டு மேல் விசாரணையை இந்த மாதம் 14ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார். [க]

# ஆலாட்சி அதிகாரி

[கொழும்பு]

திரு.சாம் விஜயசின்கா நாளை ஆலாட்சி அதிகாரியாகப் பொறுப்பேற்கின்றார்.

இவர் முன்புபாராளுமன்றச் செயலாளர் நாயகமாக கடமையாற்றியவர் என்பது தெரிந்ததே. [கு]

# பொலிசார் பொழுதுபோக்க சினிமாப்படம்

[மாவிட்டபுரம்]

வடபகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பொலிசாரை சந்தோஷப் படுத்துவதற்காக பொலிஸ் தலைமையகத்தினால் சினிமாப்படக்காட்சி காண்பிக்கப்பட்டு வருகிறது.

வடபகுதியில் கடமை புரியும் பொலிசார் ஓய்வு நேரங்களைச் சந்தோஷமாகக் கழிப்பதற்கும், சிங்களம் பேசும் பொலிசார் வடக்கில் சிங்களப் படங்களை பார்க்க முடியாது இருக்கும் நிலையைப் போக்குவதற்குமாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பிருந்து இப் படக்காட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது மாதத்தில் 5 படங்கள் வரையில் காண்பிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

காண்பிக்கப்படும் படங்கள் யாவும் சிங்களப்படங்களே என்பது குறிப்பிடத்தக்கது. இடையில் ஒரிரு ஆங்கிலப் படங்களும் இடம் பெறுகின்றன.

கொழும்பு தலைமையகத்திலிருந்து வரும் திரைப்பட வான் வடபகுதியில் ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் படக்காட்சியை நடத்திவிட்டு பின்னர் திரும்பிச் சென்று வேறு ஒரு படத்தைப் பெற்று வந்து பின்னர் காண்பிப்பதாக கூறப்படுகிறது.

இப்படக்காட்சியை பொலிசார் தமது குடும்பங்களுடன் பார்த்து ரசித்து மகிழ்கிறார்கள்.

# ஈரான் சட்டமா அதிபர் குண்டுவீச்சில் பலத்த காயம்

தெஹ்ரான் செப், 5

தெஹ்ரான் மத்திய பகுதியில் அமைந்துள்ள புரட்சிவாத வழக்குத்தொடுநர் காரியாலயத்தில் நேற்று நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சட்டமா அதிபர் அயத்தொல்லா அலி கௌதாசி பலத்த காயமடைந்தார்.

உடனடியாக இவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவத்தின் போது காரியாலயக்கட்டடமும் பலத்த சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# 17 பேரின் குடும்பங்களுக்கு ரூ. 25,000 வழங்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

காரைநகர் தோப்புக்காடு படகு விபத்தில் உயிரிழந்த 17 பேரின் 10 குடும்பங்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாவும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் செயலாளருமான திரு தேவநேசன் நேசையா வழங்கினார்.

சமூகசேவை உதவிப்பணிப்பாளர் திரு. கே. கெங்காதரன் தலைமையில் இந்நிதி வழங்கப்பட்டது.

நிதிவழங்கப்பட்டோர் விபரம் வருமாறு; மு. நவரத்தினம் நாலாயிரம் ரூபா வ. முத்தையா மூவாயிரம் ரூபா பி. இராசரத்தினம் இரண்டாயிரம் ரூபா சி. சுப்பிரமணியம் ஆயிரம் ரூபா நா. ஞானசேகரம் ஆயிரம் ரூபா மு. இராமலிங்கம் இரண்டாயிரம் ரூபா பொ. சிவனடியார் நாலாயிரம் சி. சிவபாதம் இரண்டாயிரம் ரூபா திருமதி ப. கிஷோதரா நாலாயிரம் ரூபா மு. முருகவேள் ஆயிரம் ரூபா.

இவர்களுக்கான பணம் வங்கியிலிட்டு சேமிப்புப் புத்தகங்களே வழங்கப்பட்டது. [மா]

# முதல்நாளே மூன்றரை லட்சம்

[யாழ்ப்பாணம்]

கன்னாதிட்டியில் புதிதாகத் திறக்கப்பட்ட மக்கள் வங்கிக் கிளையில் ஆரம்பநாளன்றே நடைமுறைக் கணக்காக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேமிப்புக் கணக்கு நிதியாக அன்று 30 ஆயிரம் ரூபா போடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [மா]

# 'மனித சமுதாயத்தின் விடுதலைக்குப் போராடினார்'

[யாழ்ப்பாணம்]

"மார்க்ஸிஸ லெனினிஸப் பாதையில் சோவியத்தின் அடியொற்றி இலங்கையிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தை நேர்மையுடனும் தியாகமனத்துடனும் தொடர்ந்து நடத்தி வந்தவர் பெரியார் விக்கிரமசிங்கா."

தமிழ் இளைஞர் பேரவைச் செயலாளர் மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள அஞ்சலியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்வஞ்சலி செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

"டாக்டர் விக்கிரமசிங்கா எவ்வித பட்டங்களையும் நாடாமல் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்காக உழைத்த ஒரு மாபெரும் தொண்டன். போராட்டக்காரன் என்பதிலேதான் அவரது பெருமை உயர்ந்து விளங்குகிறது. மனித வர்க்கத்தின் உடல் நோய்க்கு மருத்துவராகப் படித்த டாக்டர் உலக மனித சமுதாயத்தின் விடுதலைக்குப் போராடும் மார்க்ஸிய மருத்துவராகவே அனுபவப்பட்டார். அதனாலேதான் அவர் இன்று உலகம் பாட்டாளிகளின் விடுதலை விரும்பிகளின் டாக்டராகப் போற்றப்படுகின்றார், அவர் காலத்தில் இலங்கையில் சமதர்மப்புரட்சியைக்காண முடியாமற் போய்விட்டார்". [மா]

# மேலும் இரு வாலிபர்களுக்கு விளக்கமறியல்

[புலோலி]

வல்வெட்டித்துறை பெண் கடத்தல் சம்பவம் தொடர்பாக மேலும் இரண்டு வாலிபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 18 வயது இளம் பெண் கடத்திச்செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் வல்வெட்டித்துறைப் பொலிசாரினால் பருத்தித்துறை பதில் நீதவான் திரு. எஸ். ஜெயசிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் இருவரையும் இம்மாதம் 8ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. சந்தேகநபர்கள்சார்பில் சட்டத்தரணி திரு. எஸ். சிவனருள்சுந்தரம் [காண்டீபன்] ஆஜராகிஇருந்தார்.

V. R. V.
போக்குவரத்துச் சேவை

கொழும்பு - யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் - கொழும்பு
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு
செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களிலும்
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு
திங்கள், புதன் ஆகிய நாட்களிலும்
பஸ் சேவை நடாத்தப்படும்.
ஒருவழிப் பயணக் கட்டணம்
ரூபா 40/- மட்டுமே
கொழும்பில் ஆசனங்கள்
பதிவு செய்யுமிடங்கள்

[1]
கிறீன்லண்ட் ஹோட்டல்
பம்பலப்பிட்டி.
தொலைபேசி இலக்கம்;
85592, 81986

[2]
கந்தையா
குறோசரி ஸ்ரோர்ஸ்,
47, நொரிஸ் றோட்,
கொழும்பு-11.
தொலைபேசி இலக்கம்:
27743

[3]
V. R. வடிவேற்கரசன்
271, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி இலக்கம்; 34800, 32540

யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள்
பதிவு செய்யுமிடங்கள்

[1]
V. R. V. ட்ரான்ஸ்போட்
சேகரம் கட்டிடம்
188 3, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 8162

[2]
றிக்கோ சுவீட் அன்
கிறீம் ஹவுஸ்,
தொலைபேசி இல.
464, 7884

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு பஸ் பம்பலப்பிட்டி கிறீன்லண்ட் ஹோட்டலிலிருந்து இரவு 7-00 மணிக்குப் புறப்பட்டு நேரே செட்டியார்தெரு, கோவிலடிக்கு வந்து, அங்கிருந்து இரவு 7-30 மணிக்குப் புறப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும்
பிரயாணிகள் மேலதிக கட்டணமின்றி
வெள்ளவத்தை வரை செல்லலாம்.

# மரண அறிவித்தல்

## விஜயரட்னம் கந்தையா

ஓய்வுபெற்ற நீர்ப்பாசன ஓவசியர் கந்தையா காலமானார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், காந்திமதி, சற்குணமதி, கனகாம்பிகை (வாணி), சியாமளா, சந்திரவதனி, சிவகோஸ்வரி, சிவபாதநாதன் [விஜயா] அவர்களின் அருமைத் தந்தையும், விஜயரட்னம், நவரட்னம், மகேந்திரன், திருச்செந்தூர்நாதன், புனிதவேல், சுகுமாரன், யோகேஸ்வரி ஆகியோரின் மாமனுமாவர். ஈமக்கிரியைகள் விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 33, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். [0859]

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 808ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 6-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.